
# மாவலி

Mahavali

මාවැලි



ஆகஸ்ட் 1974

சதம் 50.

தொழிலாளர் தேசிய சங்க வெளியீடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவலி



தொழிலாளர் தேசிய சங்க வெளியீடு

ஊற்று: 1 ஆகஸ்ட் - 1974 ஓடை: 11


"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

— பாரதி.

## நூற்றி எட்டு உரு

1970ம் வருடம் தொழிலாளர் தேசிய சங்கம் முதன் முதலாக தோட்டத் தொழிலாளருக்கு மாதச் சம்பளம் வழங்க வேண்டும் என்று குரல் எழுப்பியது. இந்ததக் கோரிக்கை ஆரம்பத்தில் விபரீதமாகக் கருதப்பட்ட போதிலும், மக்கள் நல் வாழ்வில் அக்கறையுள்ள எல்லாத் தொழிற் சங்கங்களும் இக்கோரிக்கையின் அவசியத்தை உணர்ந்தன.

சட்டப்படி தோட்டத் தொழிலாளருக்கு வாரத்தில் ஆறு நாட்களும் – மாதத்தில் 26 நாட்களும் வேலை கொடுக்கப்பட வேண்டும். இச் சட்டத்தின் கருத்தை நாம் சிறிது அலசிப்பார்க்க வேண்டும். தேயிலைத் தோட்ட வேலை தினம், தினம் செய்யும் வேலை. ஒவ்வொரு நாளும் கொழுந்து எடுத்து தேயிலை பாடம் செய்ய வேண்டும். இக் காரணத்தையொட்டியே தொழிலாளர்கள் தோட்டங்களில் நிரந்தரமாகக் குடியேற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கிராமத்து உழவர்கள் இவ்வேலைக்கு லாயக்கற்றவர்களாய் இருந்தபடியால் தமிழ் நாட்டில் இருந்து இந்தியத் தொழிலாளர்கள் இங்கு வேலைக்காக குடியேற்றப் பட்டார்கள். தோட்டத் தொழிலை மாத்திரமே நம்பி வந்த காரணத்தால் இவர்களுக்கு முப்பது நாள் வாழ்வதற்கு குறைந்த பட்சம் 26 நாள் வேலை வழங்க வேண்டும் என்று சட்டம் வலியுறுத்தியது. 25 சதத்தில் ஆரம்பிக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் சம்பளம் 58 சதமாக ஆவதற்கு 75 வருடங்கள் ஆகின (1870 — 1945) இச் சம்பளம் 1950 ல் 1.10 சதமாகக் கூடியது. இதற்குப் பின் 1954ல் 15 சதம் இதில் கூட்டப்பட்டது. எனவே, இச் சம்பளத்தில் 13 வருடத்தின் பின் 1967ல் 10 சதம் கூடியதால் தொழிலாளிக்கு 1 - 35 சதம் சம்பளமாக கொடுக்கப்பட்டது. அதே சமயத்தில் நாணய விலை மதிப்பு குறைந்த காரணத்தால் வாழ்க்கைச் செலவை சமாளிப்பதற்காக 30 சதம் அலவன்ஸாக வழங்கப்பட்டது. இவ்வருவாயின் உயர்வு தொழிலாளிக்கு பலன் தராதபடி தடுக்கும் முகமாகவும், தங்களுக்கு நஸ்டம் ஏற்படாதபடி இருப்பதற்கும் விவசாயக் கொள்கையை முதலாளிமார்கள் மாற்றியமைத்தார்கள். இதன் விலைவாக தோட்டங்களில் அதிமுக்கியமான ஆண் தொழிலாளர்கள் செய்யும் வேலைகள் திடீரென குறைக்கப்பட்டன.

வாரத்தில் ஆண் தொழிலாளிக்கு 3 நாட்களும், பெண் தொழிலாளிக்கு 4 நாட்களுமே கொடுக்கப்பட்டன. தொழிலாளர்களின் நிரந்தரமான மாதவருவாய் குறைக்கப் பட்டதின் காரணத்தால் பட்டினி நிலையில் தவித்தார்கள் இந்த அவல நிலையை போக்குவதற்காகவே தொழிற் சங்கங்கள் தனியாகவும் - கூட்டாகவும் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் கொடுக்க வேண்டுமெனக் கோரிக்கையிட்டன. 1972ம் வருடம் இந்தக் கோரிக்கை ஆணித்தரமாக உருவாக்கப்பட்டு பிரதம மந்திரியின் கவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

தோட்டத் தொழில் மக்களது கஸ்ட நிலமையை அகற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தப் பிரச்சினை 1973ல் செக்டோரல் கமிட்டிக்கு பிரதமமந்திரியால் விடப்பட்டது. இக் கமிட்டியின் சிபார்சின்படி 6 மாதத்திற்கு 108 நாட்கள் வேலை கொடுக்க வேண்டும்.

மாதச் சம்பளத்திற்கும், ஆறு மாதத்திற்கு 108 நாள் வேலை வழங்குவதற்கும் ஏணிவைத்தாலும் எட்டாது. ஏற்கனவேயுள்ள சட்டத்தின்படி, ஆறு மாதங்களுக்கு 156 நாட்கள் வேலை கொடுக்க வேண்டும் இச் சட்டத்தை புதிதாக கொண்டு வரப்பட்ட சட்டம் முற்றிலும் பலகீனப்படுத்தி தொழிலாளி வாயில் மண்ணைப் போடுகின்றது. இச் சட்டத்தை தொழிலாளி வாழ்வில் அக்கறையுள்ள எந்த தொழிற் சங்கமும் ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே மாதச் சம்பள கோரிக்கையை அடைவதற்கு எல்லாத் தொழிற் சங்கங்களும் தொடர்ந்து ஞாயமான போராட்டம் நடத்த வேண்டிய அவசிய நிலை ஏற்பட்டுள்ளது.

---

(மாவலியில் வெளிவரும் மதிப்புரைகள் கதை, கட்டுரை, கவிதைகள் யாரையும் குறிப்பிடுவன அல்ல)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மலையக மக்கள் உழைப்பவர்கள். ஆனால் அவர்களின் உழைப்புக்கு மதிப்பில்லை. உழைப்பிற்கு மதிப்பில்லையென்றால் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருளுக்கும் மதிப்பில்லை. தேயிலை விலைக்கு இது ஒரு உதாரணம்.**

## மலையகப் பிரச்சினைகள் யாவை?

உழைப்புக்கேற்ற ஊதியம் இது உலக நீதியும் தொழிலாளர்களின் உரிமையுமாகும். திறமைக்கேற்ற சம்பளமும் சமதர்மக் கொள்கையாகும். உழைப்புக் கேற்ற ஊதியமும் தேவைக் கேற்ற சம்பளமும் உழைப்பை வளர்க்கவும் உழைப்பவர்களின் உற்சாகத்தை வளர்க்கவும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொருளாதார சித்தாந்தமாகும். உழைப்பே தொழிலுக்கு உயிர். உழைப்பே நாட்டின் செல்வம் - உழைப்பே பொருளாதாரத்தின் சக்தி - உழைப்பால் மனிதன் உயருகின்கின்றான் - உழைப்பால் உற்பத்தி உயருகின்றது - உழைப்பால் தொழில் வளர்கின்றது; செல்வம் செழிக்கின்றது. நாடு வளம் பெற்று நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழுகின்றனர். ஆகவே உழைப்புக்கேற்ற ஊதியம் பெற்றால் மாத்திரமே உழைப்பு உயரும். உழைப்பவர்கள் உண்டு உடுத்து, கண்டு களித்து, உற்சாகத்தோடும் உணர்ச்சியோடும் உண்மையாக உழைக்க முன்வருகின்றனர். உழைப்புக்கு மதிப்புண்டு; மரியாதையும் உண்டு.

உழைப்பவன் உத்தமன் உழைக்காதவன் திருடன் என்பது காந்திஜியின் திருவாக்கு - "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" வீணில் உண்டு களிப்போரை நிந்தனை செய்வோம் என்று பாரதியார் பாடியிருக்கிறார் - உழைப்பவர்கட்கு வந்தனை செய்வோம் - உழைக்காதவர்களை நிந்தனை செய்வோம் என்பதே அவரின் அரிய கருத்து - வரப்பு உயர, நீர் உயரும். நீர் உயர, நெல் உயரும் என்பது ஔவையாரின் அருள்வாக்கு. ஆகவே உழைப்புக்கும் உழைப்பவர்களுக்கும் மதிப்பும் மரியாதையும் போற்றலும் புகழும் இருப்பதைக் காணுகின்றோம்.

மலையக மக்கள் உழைப்பவர்கள் - ஆனல் அவர்களின் உழைப்புக்கு மதிப்பில்லை - உழைப்புக்கு மதிப்பில்லையானல் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருளுக்கும் மதிப்பில்லை. தேயிலை விலை இதற்கு ஒரு உதாரணம். தேயிலை விலை வீழ்ச்சிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் இதுவும் ஒரு முக்கிய காரணமாகும் தோட்டத் தொழிலாளர்கள் கீழ்த் தரமான ஊதியத்திற்கு உழைக்கின்றனர். தேயிலையும் கீழான விலைக்கே விற்கப்படுகின்றது. கூலி உயர்ந்தால் விலை உயரும் என்பதே பொருளாதார நிபந்தனை. தொழிலாளர்கட்கு கிடைப்பது குறைந்த கூலி; தேயிலைக்கு கிடைப்பதும் குறைந்த விலை- தேயிலை விலை குறையக் குறையத் தொழிலாளர்கள் வருமானம் குறைகின்றது - வருமானம் குறையக் குறைய வாழ்க்கை வரண்டு விடுகின்றது. தொழிலாளர்கள் வாடி வதங்குகின்றனர். வருமானம் குறையக் குறைய வாழ்க்கை வரண்டு கமாகவும் வேகமாகவும் செத்து மடிவதற்கும், குழந்தைகள் அதிகமாகச் செத்துப் பிறப்பதற்கும், தொழிலாளர் மத்தியில் பிள்ளைகள் பிறப்புக் குறைவதற்கும் முக்கிய காரணம் வருமான வீழ்ச்சியே! நல்ல சம்பளம் கிடைத்தால் நன்றாகச் சாப்பிடலாம் - நன்றாக உடுத்தலாம் - நாகரிகமாக வாழலாம் நன்றாக உழைத்தும் நல்ல சம்பளம் இல்லையென்றால் தொழில் வளர வாய்ப்பில்லை. அத்தொழிலுக்கு வருங்காலமில்லை தொழில் வளர்ந்தால் மாத்திரமே மக்கள் வாழலாம் வளரலாம் என்பது உண்மையே. ஆனால் மக்களின் நன்மைக்காக மக்கள் வாழ்வு வளம் பெற்று

---

# தொழிற்சங்கம் அதன் கடமை

**வீ. கே. வெள்ளையன்**

24 - 10 - 1969.

---

விடுகின்றது. தொழிலாளர்கள் வாடி வதங்குகின்றனர். தேயிலை விலை கீழ் நோக்கிப் பாய்ந்து கொண்டிருக்கிறது. தோட்டங்களும் புல் பூண்டுகளோடு காடாக மாறிக் கொண்டு வருகின்றன.

மலையக மக்களின் வருமானக் குறைவால் வாழ்க்கை வரண்டு வருவதின் காரணத்தால் இன்று நாடு கடத்தலையும் ஏற்றுக் கொண்டு பிறந்து வாழ்ந்த நாட்டை விட்டுப் போய்விட நாட்டங்கொண்டு விட்டனர். தொழிலாளர் அதி வளரவே நாட்டில் தொழில் வளர்ச்சி பொருளாதார வளர்ச்சிகட்கு முதலீடு செய்து முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன. பொருளாதார வளர்ச்சிக்கு உழைப்பு அதி முக்கியமானதும் அத்தியாவசியமானதுமாகும். உழைப்பைப் பாதுகாக்க வேண்டும், வளர்க்க வேண்டும். ஆகவே உழைப்பவர்களைப் பாதுகாத்து வளர்க்க வேண்டும். உழைப்பவர்களான தொழிலாளர்கள் பாதுகாக்கப்பட்டு வளர்ந்து, வளம் பெற்று வாழவே தொழிற் சங்கம் அமைக்கப் படுகின்றது. தொ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ழிற் சங்கம் தொழிலாளர் இயக்கமாக இயங்க வேண்டும். தொழிலாளர் வளர்ந்தால் தொழில் வளரும் - தொழில் வளர்ந்தால் செல்வமும் செழிப்பும் வளர்ந்து நாடு வளரும்.

தொழிலாளர்கட்கு அதி முக்கியமானது சம்பளம். தொழிலாளர்களின் சம்பளமே அவர்களின் வருமானம். அவர்களின் வருமானத்தைக் கொண்டே அவர்கள் வாழ்க்கை நடத்த வேண்டும். வருமானம் உயர்ந்தால் வாழ்க்கை உயரும் - வருமானம் வீழ்ந்தால் வாழ்க்கை வீழ்ந்து விடும். மலையக மக்கள் வாழ்க்கையிலே வீழ்ந்தவர்களாகச் சமுதாயத்திலே தாழ்ந்தவர்களாக இருப்பதற்கு அவர்கட்கு கிடைக்கும் தாழ்ந்த வீழ்ந்த சம்பளமே முதற்காரணமாகும்.

தொழிலாளர்களின் தேவைகளைத் தெரிந்து கொண்டால் அவர்கட்கு கிடைக்கும் சம்பளம் உழைப்புக்கேற்ற ஊதியமா அல்லது தேவைக்கேற்ற சம்பளமா என்பதைத் தெரிந்து கொள்ளலாம். தோட்டத் தொழிலாளர்கள் முதலில் மனிதர்கள்; இரண்டாவது உடல் உழைப்புத் தொழிலாளர்கள்; மூன்ருவது சமூகத்தில் குடும்பத்தோடு வாழ்பவர்கள் - தனது தேவையையும் குடும்பத் தேவையையும் பூர்த்தி செய்வதே குடும்பத் தலைவனின் ஆண்மகனின் பொறுப்பாகும். மனைவியின், தேவைகளைத் தேடிக் கொடுப்பது கணவனின் கடமையாகும் - பிள்ளைகளின் தேவைகளைத் தேடித் தருவதே தந்தையின் உரிமையாகும் ஆனால் ஆணும் பெண்ணும் பிள்ளையும் சேர்ந்து உழைத்த வருமானத்தில் குடும்பத்தை நடத்துவது மனிதப் பண்பு மல்ல; மனித நாகரிமுமல்ல; கலாச்சாரமுமல்ல! ஆகவே குடும்பத் தலைவனின் வருமானம் குடும்பத் தேவைகட்காவது போதுமானதாக இருக்க வேண்டும்.

மனிதனின் அதி முக்கிய தேவைகள் உணவு, உடை, வீடு ஆகும். அதே சமயத்தில் தனக்கும் தன் குடும்பத்திற்கும் அத்தியாவசியமான பாதுகாப்புகளும் தேவைப்படுகின்றன.

தோட்டத் தொழிலாளி பனியிலும் காற்றிலும் வெய்யிலிலும் மழையிலும் கடின வேலை செய்ய வேண்டிய உடல் உழைப்புத் தொழிலாளி - நல்ல பலமுள்ள திடகாத்திரமான திரேகத்தைப் பாதுகாக்கவும் உழைப்பால் இழக்கும் சக்தியை மீண்டும் பெறவும் சத்துள்ள, சக்தியுள்ள உணவை உட்கொள்ள வேண்டும் இன்ருே பசியைப் போக்கவும், வயிற்றை நிரப்பவுமே உணவு கிடைக்கின்றது. அதனால்தான் எலும்பும் தோலுமாகக் காட்சியளிப்பதும், வாலிப வயதிலே கிழவனைத் தோற்றமளிப்பதும் பலமில்லாத இரத்த மில்லாத வியாதியஸ்தர்களாக இருப்பதற்கும் காரணமாகும். சத்துள்ள உணவே சக்தியைக் கொடுக்கும் - சத்துள்ள, சக்தியுள்ள உணவு பால், பழம், முட்டை, மீன், இறைச்சி, பருப்பு வகைகள், கீரை, காய்கறி, பலவித தானிய வகைகளாகும். சாப்பிடும்போது உருசியான சத்தான அளவான வான உணவாக அமைய வேண்டும். அப்பொழுதுதான் உடல் அமைப்புக்கும் உரித்தான உணவாகும். உணவின் சத்துக் குறைந்தால் உடல் மெலிவுற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுப் பலம் குறைகிறது; பாரம் தூக்குவதற்கும் கடினமான வேலை செய்வதற்கும் பலமுள்ள உடல் வேண்டும். இயற்கையின் மத்தியிலே வேலை செய்வதாலும், கடினமான வேலை செய்வதாலும், அதிக நேரம் வேலை செய்வதாலும், கட்டான பலமான உடலைப் பாதுகாக்க வேண்டியதாலும் உயிர் வாழ வேண்டியதாலும் அதற்கு ஏற்ற பொருத்தமான உணவு தேவை- ஆகவே உழைப்பவன் உயிரைக் காப்பாற்ற, உடலைக் காப்பாற்ற, உழைப்பைக் காப்பாற்ற, உழைப்புக்கேற்ற உணவை உட்கொள்ள வேண்டும். இது இயற்கையின் நியதி.

மனிதன் மானத்தைக் காப்பாற்ற, சுகாதாரத்தைப் பேண, மக்கள் மத்தியிலே வாழ, நாகரிகமான உடைகளை உடுத்த வேண்டும். வேலை செய்வதால் வேலைக்குத் தகுந்த வேலை உடைகள் தேவைப்படுகின்றன. காற்றிலும் பனியிலும் வேலை செய்வதால் குளிராத உடைகள் தேவை - மழையிலே வேலைசெய்வதால் நனையாத உடை தேவை. ஆகவே சுகாதாரமானதும் நாகரிகமானதும் குளிராமல் இருக்கவும் வியாதியில் வீழாமல் இருக்கவும் மனிதனுக வாழவும் தகுந்த உடைகள் தேவைப்படுகின்றன. உழைப்புக்கேற்ற வாழ்க்கைக் கேற்ற உடைகளை வாங்க வேண்டும். உபயோகிக்க வேண்டும்.

உழைத்து அலுத்துப்போன உடம்பிற்கு ஓய்ந்திருக்க இடம் வேண்டும். சோர்ந்து போன மனதிற்கு நிம்மதியாக இருக்க இடம் வேண்டும். குடும்பத்தோடு வாழ வசதியான வீடு வேண்டும். சமைக்கச் சாப்பிடச் சாய்ந்திருக்க, சேர்ந்திருக்க, நிம்மதியாக நித்திரை செய்ய, குழந்தைகளோடு கொஞ்சிக்குலாவ, விருந்தாளிகளை உபசரிக்க சந்தோஷமாகக் குடும்ப வாழ்க்கை நடத்தத் தக்க, தகுந்த வசதிகள் கொண்ட வீடு தேவை. சமையல் சாமான்களை பக்குவமாக வைத்திருக்க, உணவுப் பொருட்கள் பழுது படாமல் வைத்திருக்க, உடைகள், உடைமைகளைப் பத்திரப்படுத்த, பாதுகாப்பான வீடு தேவைப்படுகிறது. நாகரிகமாக, சுகாதாரமாகக் குடும்ப வாழ்க்கைக்கேற்ற குழந்தைகட்கு வசதியான சமூக வாழ்க்கைக்குத் தகுதியான பாதுகாப்பான வீடு அவசியத்திலும் அவசியம். மலையகம் மழையும் பனியும் நிறைந்த பகுதி - ஆகவே வீடு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சுகாதாரம் அற்ற வாழ்க்கை சுகத்துக்கும் உழைப்புக்கும் உலை வைக்கும்.

சுகமில்லாத சமயங்களில் வேலை செய்ய முடியாது. வேலை நீக்கம் ஏற்பட்டால் வேலை இல்லை. தண்டனைக்காக தற்காலிக வேலை நீக்கம் கிடைக்கின்றது. இப்பொழுது தோட்டங்களில் பணமில்லையென்று வாரா வாரம் பல நாட்கள் வேலை கிடைப்பதில்லை. கல்யாணம் காட்சி, தொழிற்சங்க கூட்டம், விழா வேடிக்கைகளில் பங்கு பற்றினல் வேலையிழக்க நேரிடுகிறது. வேலை நிறுத்தங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. வயது போன காலத்தில் வேலை செய்ய முடியாது - குடும்பத்திலும் சமூகத்திலும் ஏற்படும் நன்மை தீமைகட்காக வேலையில்லாமல் இருக்க வேண்டும். வேலையில்லா நாட்களில் சம்பளமில்லை- வேலை செய்கிற நாட்களுக்கு மாத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமே சம்பளம் கிடைக்கின்றது. ஆனால் வேலையில்லாத நாட்களில் சாப்பிட வேண்டும் வாழ வேண்டும். ஆகவே உழைப்புக்கேற்ற உணவாகும், உழைப்புக்கேற்ற, நாகரிகத்திற்கேற்ற உடைக்கும், வேலையில்லா காலத்திற்கும் குடும்பச் செலவிற்கும் சமூகத்தில் ஏற்படும் ஏனையச் செலவிற்கும் பணம் தேவைப்படுகிறது. எல்லாச் செலவையும் சிக்கனமாகவும் சீராகவும் பூர்த்தி செய்யப் போதுமான வருமானம் வேண்டும். தொழிலாளர் வருமானம் தொழில் செய்து கிடைக்கும் சம்பளமே உழைப்புக்கேற்ற சம்பளமும் கிடைத்தால் மாத்திரமே ஒழுங்கான வாழ்க்கை நடத்த முடியும். ஒழுங்கான முறையான வாழ்க்கை நடத்தினால்தான் தொழிலாளர்கள் ஒழுங்கான உயர்ந்த உழைப்பைக் கொடுக்க முடியும். உழைப்பு உயர உயர்ந்த சம்பளம் இன்றியமையாதது தொழிலாளர்களின் பொருளாதார வளத்தைப் பெருக்கவும், சம்பளத்தை உயர்த்தவும், தொழில்களிலே நசுக்கப்படாமலும் சுரண்டப்படாமலும் வஞ்சிக்கப்படாமலும் பாதுகாக்கவும் சமுதாயத்தில் சம உரிமை அந்தஸ்தோடு சம உரிமையோடு வாழ வழி செய்வதே தொழிற் சங்கத்தின் கடமையாகும்.

உழைப்புக்கு விழா எடுக்கப்படுகின்றது ஆயுத பூசை என்று உழைப்பை வணங்கி வாழ்த்துகின்றனர். ஆனால் மலையக மக்களின் உழைப்பு உதாசீனப்படுத்தப்பட்டு உறிஞ்சப்பட்டுச் சுரண்டிச் சூறையாடப்படுகிறது. உழைப்புக்கேற்ற ஊதியம் என்ற உலக நீதி சர்வலோக சங்கமத்தில் கரைந்து விட்டது. உழைப்பவர்கள் கண்ணீர் விடுகின்றனர். இலங்கையை விட்டு வெளியேறி இந்தியாவில் குடியேறப் புறப்பட்டு விட்டனர்.

---

## எண் ஞானம்

எண் கணித முறைப்படி மாவலியில் எதிர்காலப் பலன்கள் வெளிவரும்.

கணித முறைப்படி தங்களின் பலன்களை அறிய விரும்பும் அன்பர்கள் கடைசிப் பக்கத்தில்தரப்பட்டுள்ள கூப்பனை தபால் அட்டை அல்லது கடித உறையில் ஒட்டி அனுப்புதல் வேண்டும். பிறந்த திகதி மாதம் ஆண்டு, நேரம் ஆகியவற்றை தெளிவாக எழுதி அனுப்புதல் வேண்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திக் கடிதம்

## இலங்கை இந்தியர் பிரச்சினை

இலங்கையில் இந்தியக் குடியேற்றம் பழங்காலமாக நடைபெற்றுள்ள போதிலும் 1827 அளவில்தான் இந்நாட்டு விவசாய பொருளாதாரத்துறைகளின் வளர்ச்சிக்கு உழைக்க இந்தியாவிலிருந்து பெருமளவு தொழிலாளர்கள் இங்கு குடியேற்றப் பட்டார்கள். குடியேற்றப்பட்ட இந்தியர்கள் சம்பந்தமாக 1939 விசாரணை செய்த சர். எட்வட் ஜேக்சன் அவர்கள் தனது அறிக்கையில் இலங்கையில் குடியேற்றப்பட்ட இந்தியர்கள் இந்நாட்டில் பலதுறைகளில் செய்துள்ள சேவைகளை சிறப்பாகப் பாராட்டியுள்ளார்.

இலங்கை வாழ் இந்தியர்கள் கடந்த சுமார் 150 வருடங்களாக இந்நாட்டிற்கு அளப்பரிய சேவை புரிந்துள்ளனர். 1821ம் வருடத்தில் ஒரு பகுதி தொழிலாளர்களைக் கொண்டு நிறுவப்பட்ட முன்னணிப்படை (Pioneer Force) 1867ம் வருடத்தில் 4000 இந்தியர்களைக் கொண்டதாக இருந்தது. காலஞ் செல்ல மிகக் குறைவான தொகையினரைக் கொண்டதாக இருந்தது. இந் நாட்டு முக்கிய பொதுமராமத்து திட்டங்கள் இம் முன்னனி படையினரால் ஆக்கப்பட்டவைகளாகும் கொழும்பிலிருந்து கண்டிக்கும், கண்டியில் இருந்து திருகோணமலைக்கும், கொழும்பில் இருந்து காலிக்கும் வேறு முக்கிய ரஸ்தா பாதைகள் இப்படையினரால் அமைக்கப்பட்டவை. சம்பளை கட்டுகாஸ் தொட்டை களுத்துறைப்பாலங்கள், விக்டோரியா பாலமும் வேறு முக்கிய பாலங்களும் இவர்களால் கட்டப்பட்டவைகளாகும். பல புகையிரத இருப்புப் பாதைகளை அமைத்தவர்களும் இவர்களே. அத்தோடு புத்தளம், களுத்துறை கால்வாய்கள் பலமுக்கிய குளங்களையும் இவர்களே கட்டினர்கள்.

முன்னனிப் படையினர் தங்களது முக்கியத்துவத்தை இழந்த காலத்திலும் பொதுமராமரத்து இலாக்கா தங்கள் சேவைக்காக பெரும்பாலும் இந்தியத் தொழிலாளர்களையே நம்பி இருந்தனர். சர். எட்வட்ஜேக்சன் இந்தியக் குடியேற்றம் சம்பந்தமாக விசாரித்து அறிக்கை சமர்பித்த காலத்தில் பொதுமராமரத்து இலாக்காவில் 4,135 இந்தியத் தொழிலாளர்களும் 7,540 இலங்கைதொழிலாளர்களும் கடமை புரிந்து வந்தனர். தங்கள் சுகத்தைப் பாராது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியத் தொழிலாளர்கள் கடினமானதும் அபயகரமானதுமான வேலைகளைப் பொறுப்போற்றுச் செய்தனர். தங்கள் சுகத்தையும் பாராது மனிதவர்க்கம் புக முடியாத இடங்கட்குச் சென்று கடமை புரிந்து வந்தனர்.

இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் சேவையைப் பற்றி குறிப்பிட வேண்டியது அவசியமில்லை ஏனெனில் இந் நாட்டு செல்வம் தழைக்க இவர்கள் செய்த சேவை பெரிது. இலங்கைக்கு இந்தியத் தொழிலாளர்கள் குடியேற்றப்படாதிருந் தால் கோப்பி, இரப்பர், தேயிலை தோட்டங்களே ஏற்பட்டி ருக்க முடியாது. இன்று கூட இந்நாட்டின் அந்நியச் செலவாணி யில் 60% இவர்கள் மூலமே கிடைக்கிறது. இதை யாவரும் ஏற்றுள்ளார்கள்.

1938 ல் தேயிலை இரப்பர் எற்றுமதி ஸ்தாபனங்களிலும் பெரும் பாலும் இந்தியத் தொழிலாளர்களே கடமை புரிந்து வந்தனர். இக்காலத்தில் கொழும்பு துறைமுகம் இந்தியத் தொழிலாளர்க ளையே நம்பி இருந்தது. நகர சபைகள் முனிசிபல் சபைகள், இரயில்வே ஆகிய துறைகளிலும் இந்தியத் தொழிலாளர்களே அமர்த்தப்பட்டிருந்தனர். மேற்கூறிப்பிட்ட எல்லாத் துறைகளி லும் இந்தியத் தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டதற்குக் கார ணம் இலங்கைத் தொழிலாளர்கள் இத்துறைகளில் ஈடுபடமுன் வர மறுத்தார்கள். இவைகளில் அவர்கள் அக்கறை காட்டவில்லை.

ஆகவே இலங்கை இந்தியர்கள் இந்நாட்டிற்கு தாங்க ளாக வேலை தேடி வந்தவர்களல்ல இந்நாட்டின் வளங்களை சீர் படுத்தி முன்னேற்றம் செய்யும் பொருட்டு அழைக்கப்பட்டவர் கள். எனினும் காலஞ் செல்ல இந்தியத் தொழிலாளர்கள் இலங் கை தொழில்களை பிடித்துக் கொண்டனர் என கூக்குரல் கிளப் பப்பட்டது. இந்திய தொழிலாளர்களை இந்நாட்டுக்கு அவசிய மில்லை எனவும் அரசியல் வாதிகள் குற்றஞ்சாட்டினர்

எனினும் 1939ம் வருடம் வரை இலங்கை அரசாங்கம் இந்தியத் தொழிலாளர்களை குடியேற்றம் செய்வதில் ஈடுபட்டே வந்தது. குறிப்பாக இந்தியா சென்று வர இரயில்வே இலாக்கா வில் கடமை புரிந்த இந்தியர்களுக்கு விசேட விடுமுறை வசதி கள் இருந்து வந்தன. இலங்கை அரசியல் வாதிகள் இந்தியர் குடியேற்றம் சம்பந்தமாக விரோதம் பேசிய போதிலும். சர் எட்வட் ஜேக்சன் முன்னிலையில் சாட்சியம் கூறிய இலங்கை அர சியல் வாதிகள் இந்தியர்கள் தாங்களாகவே குடியேற வில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும் அவர்கள் இந்நாட்டை வளம் படுத்த அவசியமானவர்களாகக் கருதி குடியேற்றப்பட்டார்கள் என்ற உண்மையை ஒப்புக் கொண்டனர்.

இந்தியர் குடியேற்றம் எவ்வளவு அவசியம் என்பதை வலியுறுத்த செங்கல்பட்டு, வேலூர், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி வேறுபல இடங்களிலும் இந்தியாவிலிருந்து தோட்டத் தொழிலாளர்கள் குடியேற வசதி செய்ய மிகப் பெரிய செலவில் அமைக்கப்பட்ட விடுதிகளே தக்க சாட்சிகளாகும். 1921ம் வருடம் இந்தியா தனது நாட்டுமக்கள் வெளிநாடுகளில் குடியேறுவதை கட்டுப்படுத்திய போது, இந்தியத் தொழிலாளர்கள் குடியேற்றத்திற்காக ரூபாய் 7000/- தை இலங்கை அரசாங்கம் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கிய தோடு, பயிற்சி பெருந் தொழிலாளர்கள் இந் நாட்டில் குடியேறுவதை தடைசெய்ய வேண்டாமென இந் நாட்டிலிருந்து இந்தியா சென்ற ஒரு விசேச தூதுக் கோஸ்டி இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டது.

இலங்கையில் குடியேற்றஞ் செய்யப்பட்ட இந்தியர்களில் பெரும்பாலும் இந்நாட்டில் நிரந்தரமாக வசித்து வருபவர்கள். ஒரு பகுதியினர் மீண்டும் இந்தியா திரும்பும் நோக்கத்தோடு இடைக்கிடை இந்தியா சென்று வந்தனர். தோட்டத் தொழிலாளர்களின் பெரும் பகுதியினர் இந்தியாவின் தொடர்பை அறவே விட்டு இந்நாட்டில் நிரந்தரமாக வாழ்ந்து வந்தனர். இவர்களை குடியேறிய தொழிலாளர்களாக கணிக்க முடியாது. இவர்கள் இந்நாட்டு மக்களே 1936ம் வருடம் முடிவில் 400,000 இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் இந்நாட்டில் நிரந்தரமாக வாழ்பவர்களாக கணிக்கப்பட்டுள்ளது.

இந்திய தொழிலாளர்கள் இந்நாட்டின் வேண்டுகோளின் பேரில் இங்கு குடியேறினார்கள் எனினும் நூற்றாண்டு காலத்திற்குப்பின் அவர்கள் இந்நாட்டுக்கு வேண்டியவர்களாக கருதப்பட்டார்கள். ஆரம்பகாலத்தில் வேலையில் அமர்த்தப்படும் சட்டத்தில் வேலை செய்ய மறுத்தால் சட்டப்படிதான் தண்டனைக் குட்பட்டு இந்நாட்டின் வளர்ச்சிக்காகக் கட்டாயமாக தொழில்புரிய வைக்கப்பட்ட இந்திய வம்சாவழியினர்தான் இன்று நாட்டை விட்டு வெளியேற இலங்கை - இந்திய ஒப்பந்தம் வழி செய்கிறது.

இந்நாட்டில் குடியேற்றப் பட்ட இந்திய தொழிலாளர்களின் சம்பளம் சுகாதார வசதிகளை, பிள்ளைகளின் கல்வி திட்டம் ஆரம்பகாலமுதல் இன்று வரை எவ்வித முன்னேற்றமின்றி குறுகிய அளவில் இருந்து வருகிறது.

(தொடரும்)

அன்பன்
பி. பெருமாள்
அரசியல் காரியதரிசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தரங்கம்

## "சமூக பொருளாதார முன்னேற்றத்தில் தொழிற் சங்கங்களின் பங்கு"

## "முன்னேற்றமடைந்து வரும் சமுதாயத்தில் தொழிற் சங்கங்களின் பொறுப்பான பங்கு"

இன்று எமது கருத்தரங்கில் நாம் எடுத்துக்கொள்ள விருக்கும் விடயம் அதாவது "முன்னேற்றமடைந்து வரும் சமுதாயத்தில் தொழிற்சங்கங்களின் பொறுப்பான பங்கு" என்பது எமது சொந்த நாட்டின் இன்றைய நிலைமையில் மிகவும் பொருத்தமானதாயும் முக்கியத்துவமுடையதாயும் இருக்கிறது. 25 ஆண்டுகளுக்கு முன்னர் நாம் அரசியல் சுதந்திரம் பெற்று சுய ஆட்சியை நடத்தி வருகின்றோம்.

நாம்பொருளாதாரத் துறையிலும் சுதந்திரம் பெற்றாலன்றி அநேக ஆண்டுகளாக இருந்து வந்த அந்நியர் ஆதிக்கத்தின் பின் பெற்ற அரசியல் சுதந்திரம் பயனற்றதாகி விடும் பொருளாதார சுதந்திரம் நமக்குக் கிடைத்தாலன்றி, பெரும் பிரயாசையினால் நாம் பெற்ற அரசியல் விடுதலை நமக்குப் பயன் பட மாட்டாது.

இலங்கை பெரும்பாலும் ஒரு விவசாய நாடு. எமது பிறநாட்டுச் செலாவணி சம்பாத்தியத்தில் மூன்றிலிரு பங்கை நாம் ஆதிகாலந்தொட்டு ஏற்றுமதி செய்து வந்த தோட்டத் தொழில் விளைபொருட்களின் விற்பனை மூலமே பெற்று வருகிறோம் ஆனால், துரதிர்ஷ்டவசமாக பொருளாதாரத்தின் இத்துறையானது இத் தோட்டங்களில் பிறநாட்டுச் சொந்தக்காரரால் அசட்டை செய் யப்பட்டது அவர்கள் தோட்டங்களிலிருந்து கிடைத்த ஆதாத் யதில் பெரும்பகுதியை தமது சொந்தநலனுக்காகப் பயன்படுத்தினர்.

1972-ஆம் ஆண்டு மே மாதத்தில் எமது தேசம் குடியர சாகிய பின்னரே மக்கள் இந்நாட்டை உணவு விடயத்தில் தன் னிறைவு பெறச் செய்யுமுகமாக அதன் பொருளாதாரத்தை விருத்தி செய்யவேண்டு மென்பதை உணரவாரம்பித்தனர். அதற் காக உள்நாட்டு மூலப் பொருள்களையும், உணவுப் பொருட்களை யும் இறக்குமதி செய்வதில் பொருந்தொகையான பிறநாட்டுச் செலவணியை விரயஞ்செய்தல் குறைக்கப்பட்டது. விவசாயத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையை, குறிப்பாகத் தோட்டத் தொழிலைச் சீர்திருத்துவதில் அரசாங்கம் அக்கறை கொண்டு திட்டமான நடவடிக்கைகளை எடுத்தது.

தோட்டங்களை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து கூடுதலான உற்பத்தியை நிச்சயப்படுத்தும் பொருட்டு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்நோக்கத்தை நிறைவேற்றும் வண்ணம், தோட்டத் தொழிலாளரின் நலன் கருதிப்பல நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துள்ளது இதுவரை, தனிப்பட்ட தோட்ட முதலாளிகளினுல் தொழிலாளருக்கு ஏற்பட்டுள்ள பல கஷ்டங்களை நீக்கும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தற்கு அடிப்படைத் திட்டத்தையும், கொள்கைகளையும் ஏற்படுத்துதற்கென ஐந்தாண்டுத் திட்டமொன்றை எமது அரசாங்கம் வகுத்துள்ளது இந்த அபிவிருத்தித் திட்டத்தில், பொருளாதார நடவடிக்கையின் சகல துறைகளிலும் உற்பத்தி வளத்தை

## திரு. ஆர். தியாகராஜா
(உதவி தொழில் கமிசனர்)

அதிகரிக்கும் அவசியம் வற்புறுத்தப்பட்டுள்ளது. எமது பிரதமர் 1973 - ஆம் ஆண்டை உற்பத்திவள ஆண்டெனப் பிரகடனஞ் செய்கையில், தொழிலாளரும், இந்நாட்டின் தொழிற்சங்க இயக்கத்தினரும் எமது பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும் அதை வலுப்படுத்துதற்கும் அவர்களது பூரண ஒத்துழைப்பை அளிக்க வேண்டுமெனக் கோரி விசேட வேண்டுகோளொன்றை விடுத்துள்ளார். பிரதமரின் வேண்டுகோளுக்கு அவர்கள் உறுதியாக இசைந்துள்ளனரென்பது உண்மையில் உற்சாகமூட்டுவதாயிருக்கின்றது.

அபிவிருத்தியடைந்து வரும் சமுதாயமொன்றில் ஒரு தொழிற்சங்கங்கத்தின் பங்கு யாதென்று சற்று ஆராய்வோம். அபிவிருத்தியடைந்து வரும் சமுதாயமானது, பொருளாதாரத்தை விருத்தி செய்வதிலேயே முக்கியமாக அக்கறை கொள்ளுதல் வேண்டும். இதனுல் நமக்குப் புலப்படுவது யாது? பொருளாதாரத்தை விருத்தி செய்வதன் நோக்கம், உற்பத்தி வளத்தையும், உற்பத்தியையும் அதிகரிப்பதும் அதன் மூலம் மொத்தத் தேசிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தியையும், ஆளொன்றுக்குச் சராசரி வருவாயையும் அதி கரிப்பதே. அபிவிருத்தியடைந்து வரும் சமுதாயத்தில், மக்களுக்கு வீட்டுவசதி, வேலையற்றோருக்குத் தொழில் வாய்ப்புகள், பிள்ளை களுக்குக் கல்வி பயிலும் வசதிகள், தொழிலில் அமர்ந்துள்ளோ ருக்கு சமூகப் பாதுகாப்பு, தொழிற் பாதுகாப்பு என்பவற்றை யும், பொதுவாக மக்களுக்கு சுபீட்சத்தையும் இன்பவாய்ப்புகள் ஆகியவற்றையும் ஏற்படுத்த வேண்டிய கடப்பாடு உண்டு. சுருங் கச் சொல்லின், மக்களுக்கு நியாயமான வாழ்க்கைத் தரத்தை உறுதியாக அளிப்பதே அரசாங்கத்தின் கடமையாகின்றது.

அபிவிருத்தியடைந்து வரும் சமுதாயத்தில் தொழிற்சங் கங்கள் மூன்று வகைகளில் உதவ முடியுமெனலாம். முதலாவ தாக, ஒரு தொழிற்சங்கம் தனது உறுப்பினருக்குச் சில கடமை களைப் புரியும் கட்டுப்பாடுடையது. இரண்டாவதாக, வேலைத் தலத்தைப் பொறுத்த வரையில் சில கடமைகளைப் புரியும் கடப் பாடுடையது. மூன்றாவதாக, சமுதாயத்திற்குச் சில கடமைகளைப் புரியும் கட்டுப்பாடுடையது.

தொழிற்சங்கங்களின் முக்கிய நோக்கம், அவற்றின் உறுப் பினருடைய வாழ்க்கை நிலைமைகளையும் வேலை நிபந்தனைகளையும் விருத்தி செய்வதே. எனவே, மேலான தொழில் நிபந்தனைகள், கட்டுப்பாடுகள், கூடுதலான சம்பளம், மேலான குடியிருப்பு வச திகள், மற்றும் இன்பவாய்ப்புகள் முதலியவற்றைப் பெறுவதற் குத் 'தொழிற் சங்கங்கள் போராடுதல் இயல்பே. ஒரு தொழிற் சங்கமானது, இச்சகாயங்களையும் இன்ப வாய்ப்புகளையும் தனது உறுப்பினருக்குப் பெறத்தவறின், அச்சங்கம் உறுப்பினரைப் பொருத்தவரை தனது கடமையில் தவறியதாகும்.

அபிவிருத்தியடைந்துவரும் சமுதாயத்தில் அரசாங்கத் தின் முக்கிய நோக்கம் உற்பத்தி வளத்தையும் உற்பத்தியை யும் அதிகரித்தலென்பதனால், தொழிற்சங்கங்கள் தமது உறுப்பி னருக்குச் சீரான வேலை நிபந்தனைகளையும் வாழ்க்கை நிலைமைகளை யும் பெற முயலும் விடயத்தில் அரசாங்கத்தின் சமூக, பொரு ளாதாரக் கொள்கைகளுக்கமைய நடந்து கொள்வது அவசிய மாகும். அவ்வண்ணம் செய்யும் விடயத்தில் தொழிற்சங்கங்களின் கடமை ஓரளவிற்குக் கஷ்டமானதாக நேரிடலாம். இந்நிலைமை யில் தான் சங்க உறுப்பினருக்குக் கல்விபுகட்டுதல் அவசியமா கின்றது.

தொழிலாளர், அபிவிருத்தியடைந்து வரும் பொருளா தாரத்தைப் பாதிக்கக் கூடிய பல்வேறு பிரச்சினைகளையும் புரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவும் உணர்ந்து கொள்ளவும் கூடிய அளவுக்கு அவர்களுக்கு அறிவு புகட்டப்பட்டாலன்றி, தொழிற்சங்கங்களே திறம்பட இயங்குதல் முடியாத காரியமாகும். ஏனெனில், ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் தாம் செய்வது சரியான காரியமென்பதை உறுப்பினர் நம்பும்படி செய்யக்கூடிய நிலைமையில் தொழிற் சங்கங்கள் இருத்தல் வேண்டும். தாம் எடுக்கும் நடவடிக்கைகள் விடயத்தில் தொழிற் சங்கங்கள் அவ்வண்ணம் செய்யத்தவறின், அவற்றின் நடவடிக்கையை உறுப்பினர் நிராகரிக்க நேரிடும். இதன் விளைவாக, தொழிலாளர் சங்கத் தலைவர்களை விலக்கவோ, தொழிற் சங்கங்களைக் குலைக்கவோ, உறுப்பினரிற் பலர் விலகி வேறு சிறிய சங்கங்களை அமைக்கவோ நேரிடலாம்.

இத்தகைய நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டும் உறுதியான, பயன் படத்தக்க தொழிற்சங்க இயக்கமொன்றை அமைக்கும் பொருட்டும், தொழிற்சங்கங்கள் தொழிலாளர் கல்விக்கு முதன்மைத்தானம் அளித்தல் வேண்டும்.

இத்துறையில் சில தொழிற்சங்கங்களுக்கு உள்ள வசதிகள் போதியனவல்லவென்பதை அரசாங்கம் உணர்ந்துள்ளது தொழிற்சங்கங்கள் தமது உறுப்பினருக்குக் கல்வி புகட்டும் கடமையில் அவற்றிற்கு உதவிபுரியும் பொருட்டு அரசாங்கம் தொழிற்திணைக்களம் மூலம் தொழிலாளருக்குத் தொழிற் கல்வித்துறையில் உதவி புரிந்து வருகின்றது. தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் உறுப்பினருக்கும் பல்வேறு பயிற்சித் திட்டங்கள் மூலம் பயிற்சியளித்தற்கு வசதிகளை நாம் ஏற்படுத்தியுள்ளோம்.

தொழிற் திணைக்களம் தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் உறுப்பினருக்கும் அளிக்கும் பயிற்சி பல திறப்பட்டது. அவற்றிற் சில, தொழிற்சங்க விடயங்கள், தொழில் நிபந்தனைகளும், குடும்பத் திட்டம், சமூக, பொருளாதார அபிவிருத்தி என்பனவாம்.

தொழிற் திணைக்களம் மூலம் அளிக்கப்படும் உதவியன்றி, இலங்கை ஆதாரக்கழகம் போன்ற நிறுவனங்களும், கருத்தரங்குகள், கலந்துரையாடல், பயிற்சித் திட்டங்கள் என்பவற்றை ஒழுங்கு செய்வதன் மூலம் தொழிலாளருக்கும் அவர்களின் தலைவர்களுக்கும் நன்மையளிப்பதோடு தொழிற் சங்கத் தலைவர்கள் தமது உறுப்பினருக்குக் கல்வி புகட்டவும் உதவுகின்றன.

ஆசிய நாடுகளை நோக்குமிடத்து, கல்வியறிவு விடயத்தில் எமது நாடு சிறந்த நாடாக விளங்குகின்றது. எனவே தொழிற்சங்கத் தலைவர்கள் தமது உறுப்பினருக்கு சமுதாயத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைதப் பொறுத்தவரையில் அவர்களது உரிமைகள், கடப்பாடுகள், கடமைகள் என்பன பற்றிப் போதிப்பது கஷ்டமன்று.

இவ்வண்ணம் அவர்கள் விடயங்களைத் தெரிந்து கொண்டால், அபிவிருத்தியடைந்து வரும் சமுதாயத்தில் தத்தம் பங்கு யாதென்பதைத் தொழிலாளர் உணரும் வண்ணம் தொழிற்சங்கத் தலைவர்கள் நடத்துதல் இலகுவாயிருக்கும்.

ஒரு தொழிற்சங்கமானது, உற்பத்திவளம், உற்பத்தி, தொழிற்திறன் என்பவற்றிற்குக் கூடுதலான கவனஞ் செலுத்துவதன் மூலமும் உற்பத்தி வளம் பற்றிய விடயங்களில் பொறுப் புணர்ச்சியுடன் நடந்து கொள்வதன் மூலமும் வேலைத்தலத்தில் உற்பத்தியை அதிகரித்தற்கு உதவ முடியும். சாதாரணமாக, எந் நிறுவனத்திலும் உற்பத்தியையும் தொழிற்திறனையும் பாதிக்கும் அல்லது அவற்றிற்குத் தடையாயிருக்கும் சில அம்சங்கள் பின்வருமாறு:—

(1) வழக்கமாக வேலைக்குப் பிந்திச் செல்லல்.
(2) வேலைக்கு வராமை.
(3) வேலையிற் போதிய கவனமின்மை.
(4) கீழ்ப்படியாமையும் ஒழுங்கின்மையும்.
(5) இயந்திரங்களை இயக்குவதிலும் உடமைகளைக் கையாளுவதிலும் கவனமின்மை.
(6) உடைமைகள், சொத்துக்கள் முதலியவற்றிற்கு வேண்டுமென்று சேதம் விளைவித்தல்.

தொழிலாளர் நேரத்தோடு வேலைத்தலத்திற்குச் செல்லத் தவறுவதனல், உற்பத்தி குறைய நேரிடுவதோடு, எத்தனையோ இடைஞ்சல்களும் தொழிற் தலத்தின் அதிபர்களுக்கு மாத்திரமன்றி அங்கு வேலைபார்க்கும் மற்றும் தொழிலாளருக்கும் உண்டாகலாம். தொழிலாளருக்குச் சிற்சில கஷ்டங்கள் இருப்பினும் அடிக்கடி அல்லது தினந்தோறும் வேலைக்குப் பிந்திச் செல்வதை முகாமையாளரெவரும் அமைதிப்பது முடியாத காரியம்.

வேலைக்குப் பிந்திச் செல்வதைப் போலவே வேலைக்கு வராமையும் உற்பத்தியைக் குறைக்கும். சில சமயங்களில் ஒரு குறிப்பிட்ட காலவரையினுள் ஒரு வேலையை அல்லது பொருள் உற்பத்தியை முடிக்க வேண்டியிருக்கலாம். சில தொழிலாளர் வேலைக்கு வரத் தவறின் அந்நிறுவனம் பெருமளவுக்குப் பாதிக்கப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தொழிற் சங்க வரலாறு

— பெ. பெருமாள் —

வளர்ந்து வரும் இன்றைய சமுதாயத்தில் தொழிலாளர்கள் தங்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், வாழ்க்கைத் தரத்திற்கேற்ப சம்பளம் பெறவும் வேலை முறைகளைப் நிர்ணயிக்கவும் தொழில் சங்கம் அமைக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. ஒரு தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் ஒற்றுமையாக ஒரு தொழிற் சங்கத்தின் மூலமாக தங்களின் பலத்தை உபயோகித்தால் தான் அது பயனுடையதாக அமையும். கூட்டுப் பேரத்தின் மூலமாக முதலாளி தொழிலாளி உறவை நன்கு பலப்படுத்த முடியுமென யாவரும் அறிந்த அனுபவரீதியான உண்மையாகும். கூட்டு நடவடிக்கையின் மூலமாகவே தொழில் நிபந்தனைகளையும், முறைகளையும் நியாயமான முறையில் அமைத்துக் கொள்ள முடியும். இவை ஒரு நல்ல தொழிலாளர் சமூகத்தை ஏற்படுத்தவும் உதவி புரிகின்றன. தொழில்களின் உரிமையாளர்கள் முதலீடு செய்ததன் காரணமாக உற்பத்தியில் நியாயமான அளவு அவர்கள் காரணமாக இருந்தாலும் தங்களின் தொழில்களில் வேலைக் கமர்த்தப்பட்ட தொழிலாளர்களுக்கு நியாயமான அளவு கடமை பட்டவர்களாவார்கள். தொழிலாளர்களுக்கு வாழ்க்கைத் தரத்திற்கேற்ற சம்பளம் வழங்கவும் அபாயகரமான நிலையில் வேலை செய்பவர்களுக்குப் போதியளவு பாதுகாப்பளிக்கவும் முதலாளிமார்கள் கடமைப் பட்டவர்களாவார்கள்.

தொழிலாளர்கள் வேலை செய்ய உறுதியும், நியாயமான சம்பளம் பெறவும், தொழில் நிபந்தனைகளைப் பாதுகாக்கும் உரிமையும், தொழிற்சங்க உரிமையையும் பெற்றிருந்தாலும் நேர்மையாக வேலை செய்யவும் நியாயமான உத்தரவுகளுக்கு கீழ்படியவும் தொழிற் சங்க நடவடிக்கைகளில் பங்கு பற்றவும் கடமைப் பட்டவர்களாவார்கள். இலங்கை தொழிற் சங்க சட்டத்தில் குறிக்கப் பட்டுள்ள குறிக்கோள்களுக்கு அமைய தொழிலாளர்கள் தொழிற் சங்கங்கள் ஒரு தொழிலில் ஈடுபட்டுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே விதமான தொழிலாளர்களைக் கொண்டதாகவும் அல்லது ஒரே தொழிலில் ஈடுபட்டுள்ள பலதரப்பட்ட தொழிலாளர்களைக் கொண்டதாகவும் அமையலாம்.

ஒரு தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தங்களுக்கென ஒரு தொழிற் சங்கத்தை அமைத்த பின் தங்களின் தொழிற்சங்கத்தின் நடவடிக்கைகளை கீழ்கண்ட முறைகளில் ஈடுபட வழிகள் ஏற்படுகின்றன.

I ஒரு தோட்டம் அல்லது தொழில் அடிப்படையில் தொழிலாளர்களின் பிரதிநிதியாக ஒரு அடிப்படைக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டிகள் "மினிட்" புத்தகம் மூலமாகவோ அல்லது தங்கள் தோட்டக் கமிட்டித் தலைவர் மூலமாகவோ நிர்வாகத்தோடு நேரடித் தொடர்பு கொண்டு தங்களின் குறைகளையும் பிரச்சினைகளையும் தீர்க்க நடவடிக்கை எடுப்பது.

II ஒரு மாவட்டத்திலுள்ள தொழிற் சங்கம் தனதங்கத்தினர்களின் பொதுப்பிரச்சினைகளைக் கவனிக்க ஒரு மாவட்ட கமிட்டியையமைத்து, தங்கள் மாவட்ட பிரதிநிதி அல்லது செயலாளர் மூலம் அங்கத்தினர்களின் பிரச்சினைகளைக் கவனிப்பது.

III தேசிய அடிப்படையில் அமைக்கப்படும் கமிட்டி தேசிய ரீதியாக தங்கள் அங்கத்தவர்கள் சம்பந்தமாக ஏற்படும் பிரச்சினைகளைக் கவனிக்கவும், கொள்கையை நிர்ணயிக்கவும் ஆராச்சி நடத்தவும் உயர் மட்ட விசாரணைகளில் பங்கு பற்றி, தொழிற் சட்டத்தின் கீழ் ஏற்படும் விசாரணைகளில் பங்கு பற்றி தீர்வுகாணவும் செய்யலாம்.

IV தேசிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள தொழிற் சங்கங்கள் நாட்டிலுள்ள தொழிற் சங்கங்களை ஒரு முகப் படுத்தவும், வேறு நாட்டு தொழிற்சங்கத்துடன் கூட்டுச் சேரவும், செய்திகளைச் சேகரிக்கவும், சர்வதேச மன்றங்களின் மூலம் தொழிலாளர்களின் நன்மைக்காக புதிய சட்டங்களை உருவாக்கவும், உதவலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற் சங்கத்தை சிறப்பாக அமைக்கவும் தொழிலாளர்களின் நன்மைக்காக உதவி பெறவும் அல்லது உதவி வழங்கவும் சர்வதேச தொழிற் சங்க சம்மேளனம் அமைக்கப்படுகின்றது.

ஒரு தொழிற் சங்கத்தின் நோக்கங்கள் யாவை என்பதை அறிய வேண்டியது அவசியம். தொழிற் சங்கம் தனது நோக்கங்களை சங்கத்தின் சட்ட விதிகளில் குறிப்பிடும் தொழிற் சங்க சட்டம் (அத்தி 138) 2ம் பிரிவின் படி கீழ்கண்ட நோக்கங்கள் உட்பட தொழிலாளர்கள் அல்லது முதலாளிகள் ஒன்று சேர்ந்து அமைக்கும் இயக்கமே தொழிற் சங்கமாகும்.

I முதலாளி தொழிலாளி உறவு, தொழிலாளர்க்கிடையே உறவு, முதலாளிகட்கிடையே உறவு, நெறிப்படுத்துதல்.

II தொழில் அல்லது வியாபார முறையைக் கட்டுப்படுத்துதல்.

III தொழிற் பிரச்சினையில் தொழிலாளி அல்லது முதலாளி பிரதிநிதித்துவம் பெறுதல்.

IV வேலை நிறுத்தப் போராட்டம் அல்லது வேலை மறுப்பு ஆயத்தம் ஆதரவு வழங்குதல் பண உதவி செய்தல், வேலை நிறுத்த அல்லது கதவடைப்பு காலத்தில் அங்கத்தினர்கட்கு சம்பளம் அல்லது வேறு உதவிகள் வழங்குதல்.

ஆகவே தொழிலாளர்களின் இயக்கம் தனது அங்கத்தினர்களின் குறைகள் அல்லது பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்கமாகவும், வேலை நிபந்தனைகளைச் சீர்படுத்தும் நோக்கமாகவும் நிறுவப்படும் போது அது ஒரு தொழிற் சங்க இயக்கமாக அமைகிறது.

தொழிலாளர் குறையே பிரச்சனையாகும். வேலை நிபந்தனைகளில் ஏற்படும் குறைகளும் பிரச்சனையே. வேலை நீக்கம், நடத்தை சம்பளம், பாரபட்சம், தொழிலாளர் நலன், பாதுகாப்பு சட்டம் அமுல், நிர்வாக ஊழியர்களின் நடத்தை ஆகிய வற்றால் ஏற்படும் குறைகளும் பிரச்சனைகளே ஆகவே முதலாளி தொழிலாளர்க்கிடையே தொழில் சம்பந்தமாக ஏற்படும் சகல முறைகளும் பிரச்சனைகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகஸ்தர்கள் சார்பில் கடமை புரியும் மத்திய தர உத்தியோகஸ்தர்கள் சிறு சிறு பிரச்சனைகள் பெரிதாக வளராது அவைகளை அவ்வப்போது தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பிரச்சினைகள் தங்கள் கவனத்திற்கு கொண்டு வரும் வரை காத்திராது பிரச்சனைகள் ஏற்பட்டாலோ, ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் தென்பட்டாலோ அவர்கள் அவற்றிக்குப் பரிகாரம் தேட முன் வருதல் அவசியம்.

தொழிலாளர் கட்சி ஏதேனும் பிரச்சினை கிளம்பும் போது அடிப்படைக் கமிட்டித் தலைவர் அல்லது தொழிலாளர் பிரதிநிதி ஒரு முக்கிய இடமேற்பார். பிரச்சினை ஏற்பட்டால் அது சம்பந்தமாக தொழிலாளர் பிரதிநிதியின் யோசனைக்காக தொழிலாளர்கள் முதலில் போவது பழக்கம். தொழிலாளர் பிரதிநிதியே நிர்வாகத்தோடு முதலில் நடவடிக்கையில் ஈடுபடுவார். ஆகவே தொழிலாளர் பிரதிநிதியாக இருப்பவர் தொழிலாளர், முதலாளி இரு சாரார்ருக்கும் நம்பிக்கையும் நாணயஸ்தராகவும் இருக்க வேண்டியது அவசியத்திலும் அவசியம்.

(வளரும்)

---

அன்புள்ள "மாவலி" ஆசிரியருக்கு,

தங்களது தொழிற்சங்க பத்திரிகையை வாசிப்பதிலே அதிக அக்கரையும், ஆர்வமும் கொண்ட எனக்கு மே, ஜுன் மாதங்களுக்குரிய "மாவலி" பத்திரிகை கிடைக்கவில்லை. அதை நான் தவறவிட்டு விட்டேனு? தாங்கள் தவற விட்டு விட்டீர்களா?

"திண்ணைப்பேச்சு" என்ற தலையங்கத்தில் எழுதியிருந்தவை உண்மையாகவே தோட்டப்புற தொழிலாளிகள் வீட்டில் நடப்பது போலவே மிக சுவையாக இருந்தது. "ஒரே பார்வையில்" என்ற தலைப்பின் கீழ் உள்ளவிலாசங்களை களை தெரிந்து கொள்ள "மாவலி" பத்திரிகை உதவியுள்ளது. அது போல் இன்றைய இளைஞர்களுக்கு மிக முக்கியமான விடயங்களை தங்களது "மாவலி" பத்திரிக்கையில் மாதம் மாதம் எதிர்பார்ப்பேன்.

"மாவலி" ஆரம்பம் முதல் முடிவுவரை வற்றுது நீரை வாரி இறைப்பது போல் என்றும் சீரும் சிறப்புமடைய எனது நல்லாசிகள்.

இப்படிக்கு;
ஜீ. நொய்லன்ராஜ்.

நுவரெலிய வழி.
புசல்லாவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக வழக்கம்

## திருமணமும் குடும்ப வாழ்க்கையும்

தோட்ட மக்களிடையே நடைபெறும் திருமணங்கள் பெரும் பாலானவை பெற்றோர்களால் தீர்மானிக்கப்பட்டு நடைபெறுகின்றன. இவ்வாறு நடை பெறுபவை சாதிக் கட்டுப்பாட்டின் முறைப்படி நடைபெறும். ஒரு சில காதல் திருமணங்களாக முடிகின்றன. திருமண வயது பெண்ணுக்கு 16 - 24 ஆகவும் ஆணுக்கு 21 - 28 ஆகவும் உள்ளது.

தமது குடும்ப வருமானம் குறைந்து விடும் என்ற காரணத்தால் 25 வயதுக்கு மேலும் பெண்களை தம்மோடு வைத்துக்கொள்ளும் பெற்றோர்களும் உண்டு.

## குடும்பம்

இந்தியத் தொழிலாளர்களின் குடும்ப நிலையை 1941ல் தொழில் கமிசனர் தொகுதி வாரியாக - (மத்திய பகுதி, மேல் பகுதி - கீழ்பகுதி) கணக்கெடுத்துப் பார்த்தபோது பெரிய குடும்பம் என்றதில் இரு பெரியவர்களும் – இரண்டு அல்லது மூன்று பிள்ளைகளும் - சேர்ந்து வாழ்பவர்களையும் கொண்டதாக கணித்தார். மத்திய தரக் குடும்பத்தில் ஒரு ஆண் ஒரு பெண் ஆகியவர்களை கொண்டதாகவும், சிறு குடும்பத்தை ஒரு பெண் அல்லது ஒரு ஆண் வசித்தலையும் குறிப்பிட்டுள்ளார்.

## குடும்பப் பண்பு

ஆண்களும் பெண்களும் வயது வந்த இளைஞர்களும் ஒன்றாக ஒரே அறையில் வாழ வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ள போதிலும், இவர்களின் குடும்ப வாழ்க்கையில் பிரமிக்கத் தக்க வகையில் ஒழுக்கத்தை கடைப்பிடித்துள்ளார்கள். இது கத்தோலிக்கரல்லாத பிற சமயத்தைச் சார்ந்த தோட்ட நிர்வாகிகளுக்கு வியப்பை ஏற்படுத்தியுள்ளது. இது இப்படி இருக்க, முறையற்ற திருமணமும் கள்ள உறவால் ஏற்புடும் குழந்தைகளும், குடும்ப சீர் கேடுகளும் தோட்டங்களில் நடப்பதுண்டு.

## திருமணம்

திருமணங்கள் சட்டத்திற்கு அமைய நடப்பதில்லை. தம்பதிகள் பிரிந்து வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்படின் பிரிந்து வேறு திருமணம் செய்து கொள்வர்.

வண : பிதா ஆஞ்சிலோ ஸ்டெப்பென்ஸ். எஸ். ஜே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் தற்போது அநேக திருமணங்கள் பதிவு செய்யப்பட்டு பின் சமயச் சடங்குகளுடன் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பதிவுத் திருமணங்களுக்கு பதிவு செய்யும் நாளில் இருந்து 14 நாட்களை திருமணத்தம்பதிகளுக்கு ஆலோசனை நாட்களாக சட்டம் வழங்குகின்றது. இக்குறிப்பிட்ட கால இடைவெளியில் தம்பதிகள் மன மொப்பின் திருமணம் செய்து கொள்ளலாம் அல்லது தடையின்றி பிரிந்து செல்லாம்.

## குடும்பக் கட்டுப்பாடு

தோட்டத்துரைமார் சங்கம் குடும்பக்கட்டுப்பாட்டை தோட்டப்பகுதிகளில் அமுலாக்கி இதற்கு ஆகும் செலவுகளையும் தாங்களே பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர். டயகம - அக்கரப்பத்தனை ஆகிய பகுதிகளில் குடும்பக் கட்டுப்பாட்டு ஒழுக்க விதிகளைப் பற்றிய கல்வியை 1964ம் ஆண்டு முதல் நடத்தி வருகின்றனர். 154 தோட்ட டாக்டர்களும், 120 மருத்துவச்சிமார்களும் இக்கல்வியை கற்றுள்ளனர். 1964ல் மாத்திரம் குடும்பக் கட்டுப்பாட்டு விளம்பர அதிகாரி 109 தோட்டங்களில் தனது விளக்க உரையை பெரிய அதிகாரிகள், இவர்களுக்கு கீழ் நிலையில் உள்ள அதிகாரிகள், - தொழிலாளர்கள் ஆகியோர்களுக்கு வழங்கியுள்ளார்.

துரைமார் சங்க வைத்திய அறிக்கையின்படி குடும்பக் கட்டுப்பாட்டின் பின் அதாவது 1964 க்கு பின் தோட்டப்புறங்களின் பிறப்பு விகிதம் 6% குறைந்துள்ளதாக அறிக்கை கூறுகின்றது. அண்மையில் பயிற்றப்பட்ட தாதிமார்களை இச்சேவையில் ஈடுபடுத்த எத்தணித்த போது தாதிக்களின் குறைவால் தொடர்ந்தும் சேவை செய்ய இயலாது போயிற்று.

## குடும்ப நலத் திட்டம்


மேய்ப்பவன் இல்லாத நிலையில் வாழும் தோட்டத் தொழிலாளர்களுக்கு குடும்ப நலத் திட்டங்களை போதிப்பதற்கு தகுந்த வழிவகைகள் செய்யப்படல் வேண்டும்.

## ஒழுக்கக் கேடுகள்

ஒழுக்கமின்மை, மதுபானம் அருந்துவது, களவு செய்தல் போன்ற துர்ப்பழக்கங்கள் நகரின் பக்கத்தே உள்ள தோட்டங்களிலேயே இருந்து வருகின்றது நகரங்களுக்கு தூரத்தே உள்ள இடங்களில் நிலமை சீருடன் இருக்கின்றது. இது இப்படி இருந்த போதிலும் கீழ் சாதி என்று அழைக்கப்படுவோரிடத்தில்குடிப் பழக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை மன்றக் கல்லூரி

— டி. ஐயாத்துரை —

பிற நாட்டு உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ந்து நம் நாட்டின் அன்னியச் செலவானியைப் பெருக்கத் தலைநகரில் பல அடுக்கு மாடி நவீன ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள இவ்வேளையில், மேற்கு ஜெர்மனி நாட்டிள்ள பிரட்றிக் ஈபட் ஸ்டிப்டங் நிறுவனத்தினர் காலமெல்லாம் கண்ணீரும் கம்பளையுமாக 10' X 12' சதுர அடி லயன் அறைகளிலே முடங்கிக் கிடக்கும் தேயிலை தோட்டத் தொழிலாளர்களின் முன்னேற்றத்தைப் பற்றியும், சமூக பொருளாதாரத்தில் இவர்களின் பங்கு என்ன வென்பது பற்றி ஆராய்ந்து போதனை செய்ய இலங்கை மன்றக் கல்லூரியை ஆரம்பித்துள்ளார்கள்.

தலைநகரின் சுதந்திர சதுக்கத்தின் ஒரு புறத்தே உள்ள குதிரைப் பந்தயத் திடலில் அழகு பொங்க இருக்கின்றது இம்மூன்று மாடிக் கட்டிடம் முப்பத்து மூன்று அறைகள் நாநூறு பேரை உள்ளடக்கக் கூடிய பொது மண்டபம், பல கருத்தரங்கு மண்டபங்கள் ஆகியவை இங்கு உண்டு. இது தவிர கருத்தரங்கங்களில் பங்கு பற்றுவோர்களின் அறிவை வளர்க்க வாசிகசாலையும், உடம்புக்கு தெம்பு கொடுக்கும் உணவு விடுதியும் உண்டு. கருத்தரங்கத்தில் நடக்கும் விரிவுரைகளை ஏககாலத்தில் பல மொழிகளில் மொழி பெயர்க்குங் கருவி வசதிகளும், எக்காலமும் குளிர்ந்த நிலையில் இருக்க குளிர் சாதன வசதி; மேல் மாடிக்குச் செல்ல மின்னணி வசதியுடன் இம்மன்றம் கம்பீரமாக அமைக்கப்பட்டுள்ளது. இது மாத்திரமல்ல, ஒவ்வொரு படுக்கையறையிலும் நீராடும் வசதியும், ஓய்வு நேரத்தில் காதுக்கினிய இசை விருந்தைக் கேட்க வானொலி ஒலி பெருக்கியும் உண்டு. ஒவ்வொரு மாடியிலும் தொலைபேசி வசதியும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1974 தை 15ம் திகதி நமது பிரதமர் திருமதி ஸ்ரீமா வோ பண்டாரநாயக்கா அவர் களாலும் பிரட்றிக் ஈபட் மன் றத்தின் உதவித் தலைவரும் ஜெர்மன் சமஸ்டிக் குடியரசின் றைன் மேற்குப் பாலினியா மாகாணப் பிரதமருமான அயின்ஸ் கூன் அவர்களாலும் திறந்து வைக்கப்பட்டது. இந்த அறிவுப் பொக் கிசம் நமக்கு இப்போதுதான் கிடைத்துள்ளது என்ருலும் உல கின் பலநாடுகளுக்கு குறிப்பாக இந்தோனேசியா, லத்தீன் அமெ ரிக்கா, கானு, கென்னியா, டான்சியா, பிலிப்பைன்ஸ், சிங் கப்பூர் ஆகிய நாடுகளுக்கு ஏற்க னவே கிடைத்து விட்டது.

## பிரட்றிக் ஈபர்ட் மன்ற

## வரலாறு

பிரட்றிக் ஈபர்ட் மன்றம் ஜெர்மனியில் உள்ள ஒரு பழம் பெரும் அரசியல் மன்றமாகும். இம் மன்றம் 1925 ம் ஆண்டு சித்திரை மாதம் 15 ம் திகதி பிரட்றிக் ஈபர்ட் என்பவரின் பெயரால். அரசியல் அபிலாசை களுக்கிணங்க நிறுவப்பட்டது. எய்டல் பேக் என்னும் இடத் தில் உள்ள தொழிலாளர் குடும் பத்தைச் சேர்ந்த இவர் ஜெர் மன் குடியரசின் முதலாவது ஜனுதிபதியாக தேர்ந் தெடுக் கப் பட்டதுமல்லாமல் இருப தாம் நூற்றுண்டின் ஜெர்மன் சரித்திரத்திலேயே ஒரு முக்கிய ராஜ தந்திரியாக திகழ்ந்தார். இவரது நோக்கம் எல்லா மக்க ளையும் ஒருமைப் படுத்துவதாக வே இருந்தது. இவரின் பெய ராலேயே தான் நமது நாட்டி லும் 1965ம் ஆண்டு இம்மன் றம் தொடங்கியது. தற்போது இது இலங்கை மன்றக் கல்லூரி என்ற புதுப் பெயருடன் இயங்கி வருகின்றது.

நமது நாட்டில் நிறுவப்பட் டுள்ள இக்கல்லூரி சாதி மத பேதத்தைக் கடந்து அரசிய லில் சிக்குராமல் தனது சேவை யை தொழிலாளி; தொழிற் சங்க தலைவர்கள், தொழில் ஆணையா ளர்கள் ஆகியோர்களுக்கு எந்த வித பேதமுமின்றி கருத்தரங்கு களை நடத்தி தனது அரிய சேவையை இந்நாட்டுக்கு செய்து வருகின்றது. இக் கல் கல்லூரியின் இயக்குனராக திரு. வேண் கடமையாற்றுகின்றுர். இம்மன்றவிரிவுரையாளர்களாக திரு. செல்லையா அவர்களும் திரு. சில்வா அவர்களும் கட மை யாற்றுகின்ருர்கள்.

கடந்த பத்து ஆண்டுகால மாக பிறட்றிக் ஈபர்ட் மன்றம் இலங்கையில் நடத்திய கருத் தரங்குகள் எண்ணற்றவை. இதன் மூலம் பயனடைந்தவர் கள் ஆயிரக்கணக்கானேர். லட் சக்கணக்கான மக்களை கூட்ட மாகக் கூட்டி மேடைகளிலே தனது கொள்கையை நிலை நாட்டுவதை விட பல கருத்த ரங்கங்களை நடாத்தி நிலை நாட் டுவதே சிறந்ததென இம்மன் றம் எடுத்துக் காட்டியுள்ளது.

1968ல், எமது சங்க அங் கத்தவர்களுக்கு "தொழிற்கல்வி யும் தொழிற்சங்கமும்" என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கை அப்போதைய மன்ற இயக்கு னர் போலோ அவர்கள் அட் டனில் இரண்டு நாட்கள் நடத் தினுர்கள். இக்கருத்தரங்கு அறி வுக்கு விருந்தாகவும் சிந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னக்கு வித்தாகவும் இருந்தது. இதுவே எனது தொழிற்சங்கப் பற்றுக்கு அடித்தளம் அமைத்தது என ஐயம் திரிபடக் கூறுவேன். மேலும் 1971 ம் ஆண்டில் கார்ல் கிறிக்ஸ் அவர்கள் நடத்திய "பொருளாதாரத்தில் உங்கள் பங்கு" என்ற கருத்தரங்கும், 1972ல் கண்டி செட்டிக் மண்டபத்தில் மன்ற விரிவுரையாளர் எஸ். செல்லையா அவர்களும், கார்ல் கிறீக்ஸ் அவர்களும் நடத்திய இரண்டு கருத்தரங்குகளும் பல படிப்பினைகளை எடுத்து எம் முன்வைத்தன. இக் கருத்தரங்குகள், சமூகத்திற்கு நாம் ஆற்ற வேண்டிய சேவைகளை நன்கு தெளிவுபட எடுத்தியம்பியது. அதைத் தொடர்ந்து இம்மன்றத்தால் நடத்தப்பட்ட எல்லா கருத்தரங்கத்திலும் பங்கு பற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ஜூலை 17 முதல் 21 வரை நடை பெற்ற கருத்தரங்கில் "மூலாதார பொருளாதார காரணிகள்" "முன்னேற்ற மடைந்து வரும் சமூகத்தில் தொழிற் சங்கங்களின் பொருப்பான பங்கு", "தொழிற்சட்டம்" "தொழிற் சங்கப்பணி" "தொழிற் சங்கங்கள் எவ்வாறு அதன் அங்கத்தினர்களை சமூக பொருளாதார முன்னேற்றத்தில் ஈடுபடச் செய்யலாம்" "தேசிய நலனுக்கும், வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்கும் உற்பத்தி அதிகரிப்பின் முக்கியம்" திருப்தியளிக்கும் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு முன்னோடியான அமைந்துள்ள நிபந்தனைகள் யாவை" ஆகிய தலைப்புகளில் நடந்த கருத்தரங்குகளைப் பற்றி இங்கு விரித்தெழுத இயலாது. ஒவ்வொரு தலைப்பிலும் நடந்த கருத்தரங்கும் ஒன்றை ஒன்று வென்று சிந்தனையை தூண்டி விட்டுள்ளது.

குழு ஆய்வு, விவாதம் போன்றவற்றில் கலந்து கொண்டோரின் உற்சாகத்தை வெகுவாக போற்ற வேண்டும். இடைவிடாக் கேள்விகளுக்கு தக்க பொருள் சொரிந்து சிறந்த பதில் அளித்த விரிவுரையாளர் செல்லையா அவர்களை பாராட்ட வேண்டும். அன்னாரின் கோடிட்ட கேள்விகள் கருத்தரங்கத்தை கலைகட்டச் செய்து கருத்தரங்கத்தில் உற்சாகத்தையும் மன மகிழ்வையும் ஏற்படுத்தி நாளைய கருத்தரங்கத்தில் நாமும் பங்கு பற்றி பேசுவோமா என்ற எண்ணத்தை, பங்கு பற்றுவோரின் உள்ளத்தில் எழுப்பியது.

ஐந்து நாட்கள் அறிவுக்கு விருந்திட்ட மன்றம் ஆங்கு வயிற்றுக்கும் நல் விருந்திட்டது. நல்ல பணியாளர்களின் அன்புநிறை உபசரிப்பால் இட்ட உணவு சுவையாக இருந்தது.

நாட்டின் நலன் - சமூக முன்னேற்றம் தொழிற் சங்கம் போன்றவற்றிக்கு நல்வழி காட்டும் இம் மன்றம் தொடர்ந்தும் சேவை செய்து நாட்டில் நல்ல சமுதாயத்தை தோற்றுவிக்கும் என்று துணிந்து கூறலாம்.

ஜாதி, மதம், மொழி நிறம் பால் என்ற பாரபட்சங்கள் ஏது மின்றி நமக்கு பல துறைகளில் அறிவு வழங்கும் இலங்கை மன்றக் கல்லூரிக்கும் அதன் இயக்குனர் வேண அவர்களுக்கும் விரிவுரையாளர் எஸ். செல்லையா அவர்களுக்கும் எமது சங்கச் சார்பில் நன்றி தெரிவிப்பதோடு, எந்த நோக்கோடு மன்றம் ஆரம்பிக்கப்பட்டதோ அப்பணியில் இடையறுது செயல்படவும் எமது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற் சங்கமும் அரசியல் கட்சியும்

பி. வி. கந்தையா

ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஒரு தொழிற் சங்கத்தை அமைத்துக் கொள்கின்றன. இதற்கு நமது நாட்டின் தொழிற் சங்க அமைப்புச் சட்டமும் இடம் தருகின்றது. எந்த ஒரு தொழிற் சங்கத்தை, எடுத்துக் கொண்டாலும், அந்தத் தொழிலுக்கு சம்பந்தமில்லாத வெளியார்கள், அரசியல் வாதிகள், நிலச் சொந்தக்காரர்கள், பெரிய வியாபாரிகள் ஆகியோரே தலைவர்களாகவோ ஏனைய முக்கிய உறுப்பினர்களாகவோ இருக்கின்றார்கள். இவர்கள் தங்களுடைய சுயநலத்தை மனதில் கொண்டு செயல்படுவதோடு தொழிலாளர்களையும் ஆட்டுவிக்கிறார்கள். அரசியல் வாதிகளோ எப்படியாவது ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு தொழிலாளர்களை அரசியல் கட்சிப் போராட்டங்களில் ஈடுபடச் செய்கிறார்கள். இதனால் தொழிலாளர்களின் உண்மையான கோரிக்கைகள் மறைந்துவிடுகின் கின்றன.

இந்த 20 ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஓரளவிற்கு தேயிலை, ரப்பர் தோட்டங்கள் தவிர்ந்த ஏனைய தொழிற் துறைகளிலுள்ள தொழிற் சங்கங்களின் தலைவர்கள் தொழிலாளர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் அந்தச் சங்கங்கள் சார்ந்துள்ள பெடரேசன், கூட்டுக் கமிட்டி போன்றவற்றின் தலைவர்கள் இன்னும் அரசியல் வாதிகளாகவே தானிருக்கிறார்கள். இதனால் அவர்களுடைய லட்சியங்களையே தொழிற் சங்கத்தில் புகுத்திசெயல்படப் பார்க்கிறார்கள். சகோதர தொழிற் சங்கத்தில் புகுத்தி செயல்படப் பார்க்கிறார்கள், சகோதர தொழிற் சங்கத்தை தனித்தனியாக விடுகிறார்களில்லை. தேயிலை - இறப்பர் தோட்டத் தொழிற் சங்கங்களை இன்னும் வெளியார்களும் அரசியல் வாதிகளுமே தான் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசியல் கட்சி வேறு, தொழிற் சங்கம் வேறு என்பதை இன்னும் தொழிலாளர்களுக்கு தெளிவு படுத்த வில்லையென்றேதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்ல வேண்டும். தொழிற் சங்கத்தில் அங்கம் வகிக்கும் ஒரு தொழிலாளி அவன் விரும்பிய ஒரு அரசியல் கட்சியில் சேர முடியாது. அவன் பல வந்தமாக அந்த தொழிற் சங்கம் ஆதரிக்கும் அரசியல் கட்சியையே ஆதரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற் குள்ளாக்கப் படுகிறுன். மலைநாட்டுத் தொழிலாளிகளைப் பொறுத்தளவிலே கல்வி அறிவு குறைவான காரணத்திஞலும், சிந்திக்கக் கூடிய திறன் குறைவாகவிருப்பதாலும் மற்றவர்கள் எந்த முடிவைச் செய்தாலும் அதை ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலையிலேயே இருக்கிறுர்கள்.

அண்மையில் இங்கிலாந்து நாட்டில் நடைபெற்ற சுரங்கத் தொழிலாளர்களின் போராட்டத்தை கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தோமானுல் உண்மை விளங்கும். அங்கு கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் தங்களின் கோரிக்கைகளை முதலாளிகள் முன் வைத்து பேச்சு வார்த்தையில் இறங்கிஞர்கள். பேச்சு வார்த்தையில் நல்ல முடிவு வராததால், அரசின் ஆதரவை நாடிஞர்கள். ஆனுல் அரசு நாட்டின் அன்றைய பொருளாதார இக்கட்டான நிலையைச் சுட்டிக் காட்டி போராட்டத்தில் இறங்க வேண்டாமென்றும், அரசுடன் தொழிலாளர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டது. ஆனுல் தொழிலாளர்களோ தங்களின் முடிவை மாற்ற முடியாதென்றும் போராட்டத்திற்கு திகதியும் வைத்து விட்டார்கள். அன்றைய அரசு இதை ஒரு சவாலாக ஏற்று நாடாளு மன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலில் குதித்தது. நாட்டு மக்களோ சுரங்கத் தொழிலாளர்களை ஆதரித்தார்கள். தேர்தலின் முடிவோ அன்று ஆட்சியிலிருந்து கன்சர்-வேட்டி கட்சி தோக்கடிக்கப்பட்டு, தொழிற் கட்சி அரசை அமைக்க இடம் கொடுத்து விட்டது. இங்கிலாந்து நாட்டு தொழிலாளர்கள் எந்த அளவிற்கு தொழிற் சங்கத்தில் பற்றுவைத்துள்ளார்கள் என்பதை அந்தத் தேர்தல் சுட்டிக்காட்டிவிட்டது.

மலைநாட்டில் வாழும் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் இன்று அரசியல் அனுதையாக விருக்கிறுர்கள். அரசியல் உரிமையை தொழிற்சங்கத்தின் மூலம் பெறமுடியுமா? காரணம் தொழிற்சங்கங்களில் வர்க்க ரீதியில் இனப் பாகுபாடின்றி சேர்ந்திருக்கிறுர்கள். இவர்களை எப்படி அரசியல் உரிமை பெற ஆதரவு கொடுப்பார்கள் ஆகவே தொழிற் சங்கங்கள், அரசியல் கட்சிகளின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, தனித்து சுதந்திரமாக இயங்க வேண்டும். தொழிலாளர்களின் நலனிலே முக்கியமாக கவனம் செலுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முன் வர வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திண்ணை

— சாவி —

நனைந்த உடை; தளர்ந்த நடை, வாடிய முகத்தோடு பத்து நாட்கள் சென்று மெய்யன் தலைவர் தன் வீட்டுக்கு வருகின்றார். அஞ்சலை கணவனைக் காணாது தவிக்கின்றாள். சோகம் பிறிட மண்சரியில் மாண்டவருக்கும் சேர்த்து ஒப்பாரி இடுகின்றாள்.

ஆரோட ஆறுமணி
அலைஞ்சலைஞ்சு வேலை செஞ்சு
சோர்ந்து நீங்க தூங்கயிலே-அட
தரவாளை மண்சரிவும்
பத்தினி மண்சரிவும்
என் சாமிகளை
சதிமோசம் செஞ்சிருச்சே. ஆ...!!

மெ: போதும் புள்ளே, போதும். உசுரோட வந்திட்டேன். நான் கூட நேர அங்கே போயிட்டுத்தான் வாரேன். என்ன செய்வோம், காலக் கொடுவினை, பனை ஏறி விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாகத் தான் இருக்கு நம்ப பொழப்பும் கதையும்.

அஞ்: இந்தா வாறேன்னிட்டு போனவுங்க - பத்து நாளு கழிச்சி வாரிங்க, எப்படி என் மனசு பொறுக்கும் நீங்க போன திக்கும் தெரியலே - தெசையும் தெரியலே, முழுச்ச கண்ணு மூடாமே ஓங்க நெனப்பா வாயிலே வந்ததெல்லாம் ஒப்பாரியாப் பாடிப்புட்டேன். என் கயித்தை காப்பாத்திட்டீங்க, சரி நனைஞ்ச துணிய உறிஞ்சுபுட்டு வேறே கட்டிக்கங்க.

மெ: நீ என்னைக் காணாமே தவிச்சிருப் பேன்னு எனக்குத் தெரியும் – காயிதம் கண்ணி போடவும் வழியில்லே ஒரே அலைச்சல் இப்ப நம்ப பொழப்புக்கும் அரசாங்கம் டிமிக்கி வைச்சிடுச்சு - அரசாங்கம் கொண்டு வரப் போற புது சம்பளதிட்டத்தை எதுத்து பிரச்சாரம் செஞ்சிகிட்டு இருந்துட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்: என்னங்க நம்ப பொழப்புக்கும் டிமிக்கியா? அநியாமும் அட்டுளியமுமாக இருக்கே! வேலே கிடைக்கிறதோ கெழமைக்கு நாலு நாளு - ஐஞ்சு நாலு அதுலேயும் மண்ணு? அரை வகுத்து கஞ்சிக்கே பத்தாமே இருக்கு இப்போ நாம செய்யிற நாதாரிப் மொழப்பு, அதுலேயும் சட்டத்தை திணிச்சிட்டா வனவாசம் தாங்க போகணும்.

மெ: கரக்கிட்டா சொன்னே போ! ஆறு மாத்தைக்கு 108 நாளு வேலே கட்டாயமா தொழிலாளிக்கு கொடுத்து ஆகணும் என்று சட்டம் வரப்போகுது, அதாவது ஒரு மாத்தைக்கி 18 நாளு வீதத்திலே

அஞ்: வெய்யிலு காலத்துக்குங்களா? நல்லதுதானே!

மெ: ஒனக்கு வெளுத்த தெல்லாம் பாலுதானே! இந்தச் சட்டம் அமுழுக்கு வந்தா தொழிலாளி பாடு திண்டாட்டம் மொதலாளி பாடு கொண்டாட்டம் இறதே நீ ஓசிக்கலே, ஆறு மாத்த வேலேயை மூணுமாத்தையிலே முடிச்சுப்புட்டு அப்பரம் தொரைமாறு நெனேச்சபடி வேலே கொடுப்பாங்க, தட்டிக் கேக்க முடியாது. கொழுந்துகாலத்துலே கூட இந்த சட்டத்தை வச்சிகிட்டு நம்பளே மேச்சுப் புடுவாங்க மேச்சு!

அஞ்: அடி ஆத்தே!!

மெ: அதோட, இனிமே வாரத்திலே ஆறுநாள் வேலே கேட்க முடியாது கேட்டா, உனக்கு ஆறுமாதத்துலே 108 நாள் வேலே கொடுத்திருக்கா இல்லேயா என்று பார்த்து விட்டு கேளு என்பாரு தொரை.

அஞ்: சட்டத்திலே மூடுமந்திரமா இருக்கிற ஆறுமாச - வேலேயைப் பத்தி என்னங்க சொல்லுது?

மெ: அதுவா? பிரமரகசியம்புள்ளே! கெசட்டு மூலமா கருவாட்டுக்கு விலே போடுற மாதிரி நம்ப ஓழைப்பையும் முடிவு செய்வாங்க!!

அஞ்: சந்தையிலே போட்டுட்டாங்கன்னு சொல்லுங்க நம்ப பொழப்பே! இப்பத்தானே நெனவுலே வருது. இந்தக் கெழமை சந்தைக்கு போயிட்டு வாங்க - ஓங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கச்சி மக சிந்தாமணிக்கு சோறு கட்டிக் கொடுக்க கணும். ஐஞ்சு மாசமா குளிக்காமே இருக்கிறு . ?

மெ: இந்தச் சட்டம் வந்துட்டா புள்ளே. புள்ளெ பெத்த காசு கூட கெடைக்காது நம்ப பொண்டுகளுக்கு. மாச மாகி ஒரு பொம்புள்ளே 150 நாளு பேரு போட்டி ருந்தாத் தான் இந்தக் காசு கெடைக்கும். இல் லாட்டி ஏதோ தொரைமார் காலப்புடிச்சி கொடுத் ததே வாங்கிக்க வேண்டியதுதான் - சட்டமும் அப்படி இருக்கு.

அஞ்: வாயிலே அடிச்சு - வயித்திலே அடிச்சு - இப்போ கொரவளையையும் புடிச்சிட்டாங்களே!

மெ: நேரே அடிக்கிற அடி மாத்திரம் தானே ஒனக்கு வெ ளங்கி இருக்கு மறை முகமா புரவிடண்டு பணத்து லேயும் கையை வைக்கப் போறுங்க, அதோட லீவு சம்பளம் கூட இனி 12 நாளுக்குத் தான் கெடைக்கும்.

அஞ்: என்னுங்க 17 நாளுக்கு முழு போனசு கெடைக்கு மே!

மெ: மொத்தமா நாம 288 நாள் வேலே செஞ்சிருந்தாத் தான் 17 நாளு லீவு சம்பளம் கெடைக்கும் - இப்பவரு கிற சட்டப் படி பாத்தா 216 நாளுதானே வருது– அதன்படி 12 நாளுக்குத் தான் போனசுகிடைக்கும்.

அஞ்: 72 நாளு வித்தியாசப்படுதே அப்போ என்னத்தங் கோ செய்வோம் - காணிகறை இருந்தாலும் அதுலே ஒழைக்கலாம். நாம இந்த நாட்டுலே அன்னியராப் போயிட்டோம் . . . எந்த தங்க மூளேக் காரருங்க இந்த ஒவிய சட்டத்தை நம்ப தலே மேலே கட்டி வச்சவரு எல்லோருக்கும் ஒரு சட்டம் - நமக்கு ஒரு சட்டம்.

மெ: தொழிலாளியின் கூடப்பிறந்த தோழன் என்று சொல்லு கிறவரு, நம்ப நிலேயை நல்லா அறிஞ்சவரு தெரிஞ்ச வரு. பிரபல தொழிற்சங்கத் தலேவரு. ஒருவர் மந்திரி சபையிலே் இருக்காரு அவருவிட்ட சட்டம் புள்ளே ! சட்டம் ! !

அஞ்: அதிகம் படிச்சவங்கதான் களனிப் பானேயிலே கையை வைப்பாங்கன்னு எங்க ஆத்தா சொல்லும். அது சரி யாயிடுச்சே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி ? - பதில் !

## "உண்மை விளம்பி"

குறிஞ்சி பாலகிருஷ்ணன். சின்ன மண்வெட்டி தோட்டம், கொட்டகலை.

கேள்வி:- அரசு சுவீகரிக்கும் தோட்டங்களில் தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகளைப் பறிப்பதும் - தொழிலாளர்களின் "சக்தியை" சிதைப்பதுமாக இருக்கிறதே!

பதில்:- இந்த நிலைமையை மாற்றுவதற்காக தொழிற்சங்கங்கள் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. உயிருக்கு ஆபத்து வரும்போது அவசியம் தப்பித்துக் கொள்வதற்கு வழி தேட வேண்டுமல்லவா.

ஆர். கருணாகரன். சி. மண்வெட்டி, தோட்டம் கொட்டகலை.

கேள்வி:- தொழிற்சங்க கூட்டுக் கமிட்டியில் தொ. தே. சங்கம் அங்கம் வகிக்காதது ஏன்.

பதில்:- அரசியல் காரணத்தால்.

ஆர். பி. காந்தன், யொக்ஸ் போர்ட், தலவாக்கொல்லை.

கேள்வி:- யூ – என் - பியை வால் பிடிக்கும் தொழிற்சங்கத்தின் நிலை.

பதில்:- இதற்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

கேள்வி:- மலையக மக்கள் மீது வட பகுதி அரசியல் வாதிகளுக்கு திடீரென கருணை பிறந்ததேன்?

பதில்:- கருணை ஓர் உயர்ந்த தன்மை. அதையேன் கிண்டிப் பார்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ. வி. பி. ராஜா. றைதோட்டம், பலாங்கொட,

கேள்வி:- இலங்கையில் எத்தனை தொழிற்சங்கங்கள் உள்ளன? அவற்றில் தொழிலாளி தலைமை தாங்கும் தொழிற் சங்கம் எத்தனை?

பதில்-: 16 தோட்ட தொழிற் சங்கங்கள் உள்ளன. எங்களுக்குத் தெரிய ஒரு சங்கத்தில் தொழிலாளி தலைமை தாங்குகின்றார். அது தொ - தே - சங்கம்.

கேள்வி :- நமது சங்கத் தலைவருக்கு மந்திரி பதவி கிடைத்து விட்டால் தோட்டத் தொழிலாளரின் நிலை என்னாகும்.

பதில் :- தேர்தல் மூலமாகவா நியமன மூலமாகவா?

திருமதி. இராஜேஸ்வரி, டின்சின் எஸ்டேட், பொகவந்தலாவ.

கேள்வி:- தொழிலாளர் தேசிய சங்கம் நடுநிலையான சங்கமென்று கூறிக் கொண்டு அரசுக்கு ஆதரவளிப்பதாக சிலர் குறை கூறுகின்றார்களே - அவர்களைப் பற்றி.

பதில்:- நடு நிலமைக்காரர்களை பொதுவாக எல்லோரும் குறை கூறுவார்கள் தான். இது ஒரு சிக்கலான நிலை.

ஜீ. நொய்லன்ராஜ், புசல்லாவ

கேள்வி :- இன்று இனம், மொழி பண்பாடு என்பவற்றில் ஒன்று சேர்ந்து வாழ்பவர்கள் யார்.

பதில்:- யூதர்கள்.

கேள்வி:- அங்கத்தினர் சேர்ப்பதிலா பிரச்சினைகள் தீர்ப்பதிலா தொழிற்சங்கங்கள் அக்கரை கொண்டுள்ளது.

பதில்:- பிரச்சினையை உருப்படியாக தீர்த்தால் அங்கத்தினர்கள் தானே வருவார்கள். ஆள் கட்டியகாலம் போய் விட்டது.

எம். தனலெட்சுமி. அல்கொல்லை, அப்புகஸ்தலாவ.

கேள்வி :- மாவலி புத்தகத்தின் முதல் பக்கத்தில் "ஊற்று, ஓடை" எனப் போடப்பட்டிருப்பதின் காரணம் என்ன?

பதில் :- மாவலி நதியைக் குறித்தே. முதலாம் வெளியீட்டில் விளக்கத்தைப் பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி:- மலையக மக்களிடையே பொருமையும், வஞ்சகமும் தலை தூக்கி ஆடுவதற்கு முக்கிய காரணம்?

பதில்:- சுய நலமும் பற்றுக் குறையும்

திருமதி மீனம்மா கிருஷ்ணு. குயின்ஸ் பெரி கீ/பி.
கொத்மலை.

கேள்வி:- மலையக மக்களுக்கு உங்கள் இயக்கம் எடுத்துள்ள நடவடிக்கை?

பதில்:- தொழிலாளர்கள் நலன் குறித்து பல்வேறு நடவடிக்கை எடுத்ததின் காரணமாக தொ தே.ச தலை நிமிர்ந்து நிற்கின்றது.

கேள்வி - மலையக மங்கையர் தொழிற் சங்க இயக்கத்தில் ஏன் புறக்கணிக்கப் படுகிருர்கள்.

பதில்:- மங்கையர் புறக்கணிக்கப்படவில்லை. ஆனுல் அவர்கள் மத்தியில் தகுந்த தலைவர்கள் இருந்தால் அவர்களுடைய நிலைமை மாறும் - இந்தக் குறையை நாங்கள் உணர்கின்ருேம்.

வி. அருந்தவராஜன். டிக்கோயா.

கேள்வி:- தொழிற் சங்கங்கள் அனைத்தும் ஒன்றுபட்டால் தான் மாதச் சம்பளம் கிடைக்கும் என்பது உண்மையாயின் தொழிலாளிக்கு இந்த யுகத்தில் மாதச் சம்பளம் கிடைக்காது என்கின்றேன்? உங்கள் விளக்கம்!

பதில்:- மலையக தொழிற் சங்கங்கள் ஒன்று கூடி மாதச் சம்பளத்திற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கக்கூடிய சூழ்நிலை உருவாகி வருகிறது.

கேள்வி:- மலையக தமிழ் தோட்டத் தொழிலாளரின் கலை, கலாச் சாரத்தில் உங்களின் பங்கு.

பதில்:- இதை நீங்கள் தான் நிர்ணயிக்க வேண்டும்.

என் ஞானம்
மாவலி
த. பெ. எண் 13
கொழும்பு 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவலி ஏஜண்டுகள்:-

கே. கார்த்திகேசு. கல்பஞுஸ்,
357 காலி வீதி, கொழும்பு 3.

எஸ். பி. செல்லமுத்துப்பிள்ளை,
25 அம்புகமுவ ரோட், கம்பளை.

டி. எம். தாசன், ஜெயம் ஸ்டோர்ஸ்,
304 பிரதான வீதி, பசறை.

யோகாஸ் 21, 7வது லேன், மஸ்கேலியா.

டி. சந்திரசேகரன், 33, ராஜவீதி, மாத்தளை.

பீ. வேலுசாமி வீலா ஸ்டோர்ஸ்,
53 பிரதான வீதி, நோர்வுட்.

தேவராஜ் மாஸ்டர், கலைவாணி ஸ்டோர்ஸ்,
பசுமலை பஜார், அக்கரபத்தனை.

கருணாநிதி. மே/பா பாலா,
புதிய பஸ் நிலையம், கலஹா.

ஜவார் ஸ்டோர்ஸ்
புப்புரஸ்ஸ ரோட், கலஹா.

வி. எம். இராமசாமி (குறிஞ்சி அறிவழகன்)
பரமேஸ்வராக் கல்லூரி, மடுல்கெல.

பிரதி வேண்டுவோர் கீழ்கண்ட
விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்.

நிர்வாக ஆசிரியர்
"மாவலி"
618 3/3 காலி வீதி
கொழும்பு - 3

Published for the National union of workers, 618- 3/3 Galle Road Kollupitiya, Colombo, 3, and Printed at the varuna Printers, Colombo - 10
Managing Editor. C. V. Velupillai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org